**செ.வெ.எண் : 398** **நாள் : 2/7/2007**

# நகராட்சி நிர்வாகத் துறை சார்பான சட்டமன்ற அறிவிப்புகள் மற்றும் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு.

## பத்திரிக்கை செய்தி

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2006–07 மற்றும் 2007–08 நிதியாண்டுகளில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 02.07.2007 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு கூட்டத்தின் துவக்கத்தில் கடந்த 2006–07ம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பில் ரூபாய் 410 கோடியில் JNNURM / UIDSSMT திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், துறையின் ஒருமித்த முயற்சியினால் குறுகிய காலத்திற்குள் இந்த திட்டங்களின் கீழ் 157 திட்டங்களுக்கு ரூபாய் 2768 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பது மிகவும் பெருமைப்படத்தக்கது என நகராட்சி நிர்வாகத் துறை அரசு செயலர், தெரிவித்தார்.

பின்னர் திட்ட வாரியாக நடந்த ஆய்வில், 2006–07ம் ஆண்டு ரூபாய் 13.32 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகளும் ரூபாய் 3.92 கோடியில் குடிநீர்த் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அனைத்துப் பணிகளும் செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டது. அதே போன்று சென்ற ஆண்டும், இந்த ஆண்டிலும் அறிவிக்கப்பட்ட 102 நவீன இறைச்சிக் கூடங்கள் மற்றும் 52 எரிவாயு தகன மேடைகள் மொத்தம் ரூபாய் 51.10 கோடி செலவில் எடுக்கப்பட்டுள்ளவை பிப்ரவரி 2008க்குள் முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடங்களில் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கான காரணங்களை விரிவாக விவாதித்து விரைவில் நில எடுப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி முடிவெடுக்க அறிவுறுத்தினார். துறை மூலம் குறிப்பிட்டுள்ள இலக்கினை எட்டவும் அறிவுறுத்தினார்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JNNURM) மூலம் மதுரை, கோவை மாநகராட்சிகளில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து விவாதித்து திட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்க அறிவுறுத்தினார்.

அதே போன்று சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) மூலம் நடைபெறும் சாலைப்பணிகள் இவ்வாண்டுக்குள் முடிக்கவும், த.கு.வ.வாரியம் மூலம் நடைபெறும் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவில் துவங்கி உரிய காலத்திற்குள் முடிக்கவும் அறிவுறுத்தினார். 2007–08 அறிவிப்புகளில் வரும் BSUP குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் விரைவில் துவங்கப்படவுள்ளது. மதுரையில் ரூபாய் 130 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 12,500 வீடுகள் மேம்படுத்தப்படும். கோவையில் ரூபாய் 2 கோடியே 57 இலட்சத்து 82 ஆயிரம் செலவில் 15,342 வீடுகள் மேம்படுத்தப்படவுள்ளது. இவற்றை துரிதப்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவை தவிர தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (IHSDP) கீழ் 15 நகராட்சிகளில் 10230 மனைகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்டப் பணிகளின் தற்போதைய நிலைமை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. 2006–07 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மானியக்கோரியின்மீது அறிவித்தப்படி ஊரகப் பகுதிகளில் 7742 குடியிருப்புகளுக்கு முழுமையான அளவு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

63 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் 400 கோடி மதிப்பீட்டிலும் 2154 குடியிருப்புகளில் உள்ள 29 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் கரூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூபாய் 104.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டது.

2007–08ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 9000 குடியிருப்புகள் முழுஅளவு பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதுவரை 575 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 2054 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 626 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதுவரை 10 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. 2007–08ஆம் ஆண்டில் பயனுக்கு கொண்டுவரப்பட உள்ள திட்டப்பணிகளை விரைவுபடுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகளை முடிக்க அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

6 புதிய குடிநீர்த் திட்டங்களுக்கான விரிவான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு ரூபாய் 47 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. நடப்பு நிதியாண்டிலேயே பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., , நகராட்சி நிர்வாகத் துறை ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., , த.கு.வ.வாரிய மேலாண்மை இயக்குநர், திரு. சுவர்ண்சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் துறை இணை ஆணையர் திரு. மக்வானா, இ.ஆ.ப.,, நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**